வகுப்புவாதத்தை தூண்டும் வகையில் பேசிய

அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக தகுதிநீக்க நோட்டீஸ்!

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சார்பில் கொடுக்கப்பட்டது!

புதுடெல்லி, டிச. 14 - வகுப்புவாதத்தை தூண்டும் வகையில் பேசிய அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவை தகுதி நீக்கம் செய்யக் கோரி நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் சார்பில் நோட்டீஸ் கொடுக் கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் பிர யாக்ராஜில் கடந்த 8 ஆம் தேதி நடைபெற்ற விஷ்வ ஹிந்து பரிஷத் மாநாட்டில் அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதி சேகர் குமார் யாதவ் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர் பெரும்பான்மையின ரின் விருப்பப்படி இந்த நாடு செயல் படும், இதுதான் சட்டம், பெரும் பான்மைக்கு ஏற்ப சட்டம் செயல்படுகிறது என்றும் சர்ச்சைக் குரிய கருத்துக்களை தெரிவித் தார். மேலும் பசுக்களை பாதுகாப் பது இந்துக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று என்றும் அவர் தெரிவித்தார். அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதியின் இந்த பேச்சு சர்ச்சைக்குள்ளானது... இத னைத் தொடர்ந்து நீதிபதி சேகர் குமார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பல்வேறு தரப்பினரும் கடிதங்களை அனுப்பினர்

இந்நிலையில், வகுப்புவா தத்தை தூண்டும் வகையில் பேசிய அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சேகர் குமார் யாதவை தகுதி நீக்கம் செய்யக்கோரி நாடாளுமன் றத்தில் எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. கபில் சிபல், கே.டி.எஸ்.துளசி, பி. வில்சன் உள்ளிட்ட 55 எம்.பிக்கள் இந்த நோட்டீஸில் கையெழுத்திட் டுள்ளனர்.

நாகப்பட்டினம், செம்பியன் மகாதேவியில் - சுவர் இடிந்து விழுந்து இறந்த

கவியழகன் குடும்பத்துக்கு ரூ.4 லட்சம் பேரிடர் நிவாரண நிதி!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்!

நாகை, டிச. 14 - நாகப்பட்டினம் வட்டம் செம்பியன்மகாதேவி கிரா மத்தைச் சேர்ந்த கவியழ கன், த/பெ. முருகதாஸ் என் பவர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து இறந்துவிட்டதைய டுத்து அவரின் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.4,00,000/-க்கான (ரூபாய் நான்கு இலட்சம்) காசோ லையினை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன் பில் மகேஷ் பொய்யா மொழி நேற்று (13.12.2024) வழங்கினார். மாவட்ட ஆட் சித்தலைவர் ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் உடன் இருந்தனர்.

நாகப்பட்டினம் மாவட் டம் மற்றும் வட்டம் செம்பி யன்மகாதேவி கிராமம் விநா யகன் தோப்பு என்ற முகவரியில் வசித்து வந்த கவியழகன், த/பெ.முருக தாஸ் என்பவர் 11.12.2024 இரவு பெய்த கனமழையில் சுமார் 11.45 மணியளவில் அவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் இடது காதில் ரத்தக்கசிவு வரப் பெற்ற நிலையில் 108 ஆம்பு லன்ஸ் மூலமாக நாகப்பட்டி னம் ஒரத்தூர் மருத்துவமனை யில் தந்தை முருகதாஸ் முகத் திலும், தலையிலும் லேசாக அடிப்பட்ட நிலையிலும், தாயார் திருமதி.லெட்சுமி என்பவருக்கு கையிலும் அடிப்பட்டுள்ள நிலையி லும், தங்கை சிவஸ்ரீ என்பவ ருக்கு காலில் அடிபட்டுள்ள நிலையிலும், நாகப்பட்டி னம் ஒரத்தூர் மருத்துவம னையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டனர். இந்நிலையில் அங்கு பணியி லிருந்த மருத்துவர் பரிசோ தித்ததில் கவியழகன், த/ பெ.முருகதாஸ் என்பவர் ஏற் கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இறந்தவரின் தந்தை முருகதாஸ், தாயார் திருமதி.லெட்சுமி, தங்கை சிவஸ்ரீ ஆகியோர் நாகப்பட் டினம் ஒரத்தூர் மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்ப அழைத்து வரப்பெற்றுள்ளனர்.

மேலும் இறந்த கவியழ கன் உடல் ஒரத்தூர் அரசு மருத்துவமனையில் உடற்கூ ராய்விற்காக வைக்கப்பட் டுள்ளது. செம்பியன்மகா தேவி கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை அடிப்ப டையிலும், தெற்குபொய் கைநல்லூர் சரக வருவாய் ஆய்வாளர் அறிக்கை அடிப் படையிலும் வேளாங் கண்ணி காவல் நிலை முதல் தகவல் அறிக்கை அடிப்ப டையிலும் இறந்த கவியழ கன் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.4,00,000/-க்கான காசோ லையினை மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன் பில் மகேஷ் பொய்யா மொழி இன்று வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெ.ரூபன் சங்கர் ராஜ், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் கோ.அரங்கநாதன், நாகப் பட்டினம் வட்டாட்சியர் ராஜா மற்றும் அரசு அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.

மலேசியாவில் நடந்த ஆசிய பசிபிக் போட்டியில் 24 பதக்கங்களை வென்ற

தமிழ்நாட்டு வீரர் - வீராங்கனைகளுக்குப் பாராட்டு!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, டிச.14–

மலேசியாவில் நடந்த 10–வது ஆசிய பசிபிக் மாற்றுத்திறனாளி கள் போட்டியில் இந்தியா வென்ற மொத்தம் 55 பதக்கங்களில் 24 பதக்கங்களை வென்ற தமிழ் நாட்டு வீரர், வீராங்கனைக ளுக்குப் பாராட்டு தெரிவித்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு:-

மலேசியாவில் நடைபெற்ற 10th Asia Pacific Deaf Games 2024-ல் தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மாற்றுத்திறனாளி விளை யாட்டு வீரர், வீராங்கனையர் வெவ்வேறு விளையாட்டுக்களில் 6 தங்கம், 13 வெள்ளி, 5 வெண் கலம் என மொத்தம் 24 பதக்கங் களைக் குவித்து சாதனை படைத் துள்ளனர். இப்போட்டியில், இந்தியா ஒட்டுமொத்தமாக 55 பதக்கங்களை வென்றுள்ள நிலையில், அதில் 24 பதக்கங் களை தமிழ்நாட்டு வீரர், வீராங் கனையர் குவித்திருப்பதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்தேன். பதக்கங்களை வென்ற தம்பிகள் மணிகண்டன், ராக்கப்பன், வினித், சாந்தனு, கார்த்திக், முகம்மது யாசின், சுதன் மற்றும் தங்கைகள் பிரி யங்கா, சுபஸ்ரீ, சமீஹா பர்வீன், ஹரினி, ஜெர்லின் அனிகா ஆகி யோருக்கு வாழ்த்துகள். இப்போட்டியில் பங்கேற்க உதவி டும் வகையில், நம் வீரர்களின் பயணம் உள்ளிட்ட செலவினங் களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமும், - 'எலைட்' திட்டத்தின் வழியாக தங்கை ஜெர்லின் அனிகாவுக் கும் நிதியுதவி அளித்திருந்தேன். தற்போது பதக்கங்களோடு திரும் பியுள்ள நம் வீரர் - வீராங்கனையரின் திறமையைப் பாராட்டுகிறோம். நம் மாற்றுத்திற னாளி வீரர்களுக்கு என்றென் றும் துணை நிற்போம். அவர்க ளின் வெற்றிப்பயணம் தொடரட்டும்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.